# அடிப்படைக் கோட்பாடுகள்

## நாங்கள் நம்பிக்கை கொண்டிருப்பது

நாம் பால்நிலை மற்றும் சமூக நீதிக்காக ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுடன் செயலாற்றுவதன் மூலம் மற்றம் ஆணாதிக்கம் பற்றிய தீங்கான மற்றும் வேரூன்றியுள்ள கருத்துக்களுக்கு சவால் விடுத்து ஆண்களை முதன்மைப்படுத்தும் அதிகாரங்களை முடிவுறுத்தும் கூட்டான நடவடிக்கைகககளைக் கொண்ட சர்வதேச சமூகமாகும். எம்மிடையே காணப்படும் பன்மைத்துவங்களை நாங்கள் போற்றிக் கொண்டாடுகின்றோம். எமது பின்னணி, இயல்நிலைகள், பொறிமுறைகள் மற்றும் சூழமைவுகள் பல்வகைமையானதாகும். ஆனாலும் எம்மிடையே தற்போது, நாங்கள் காண்கின்ற உலகம் மற்றும் நாங்கள் காண விரும்பும் உலகத்தைப் பற்றியும் பொதுவான புரிதலைக் கொண்டுள்ளோம்.

எமது *அடிப்படைக் கோட்பாடுகள்* பொதுவான புரிதலை அடிப்படையாக் கொண்டமைந்ததாகும். தனிநபர்களாக, நிறுவனங்களாக, மற்றும் கூட்டாக இக்கோட்பாடுகள் எமது நம்பிக்கைகள் மற்றும் பெறுமதிகளை உறுதிப்படுத்துகின்றன. எமது முயற்சிகளுக்கு வழிகாட்டுகின்றன, மற்றும் பால்நிலை நீதி, சமூக நீதி மற்றும் அனைவருக்குமான மனித உரிமைகள் போன்றவற்றுக்கு எமது பணிகளை ஊக்குவிக்கின்றது. அம்முயற்சி அனைத்து மக்களும் சமமானதும், பாகுபாடுகள் மற்றும் ஒடுக்குமுறைகளற்ற உலகத்தை உருவாக்குவதற்கேயாகும்.

இவ் அடிப்படைக் கோட்பாடுகள் MenEngage Alliance இன் பொறுப்புக் கூறல் நியமங்கள் மற்றும் ஒழுக்கநெறிக் கோவையுடன் இணைத்துப் பார்க்கப்படல் வேண்டும்.

**அடிப்படைக் கோட்பாடுகள்**

1. நாங்கள் பெண்கள் உரிமைகள் மற்றும் பால்நிலை சமத்துவத்திற்காக உறுதியாக நிற்கின்றோம்

   உலகளாவிய ரீதியில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் குறிப்பிடத்தக்களவு பால்நிலை ரீதியான அநீதிகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றமையை நாங்கள் **அடையாளங் கண்டுள்ளோம்.** இது உடனடியாக மாற்றமடைய வேண்டியதுடன், நாம் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் மற்றும் அநீதிகளின் மூலகாரணிகளை இல்லாது செய்வதன் மூலம் இவற்றை மாற்றுவதற்காக செயற்படுவோம்.

பெண்ணியவாத பெண்கள் உரிமை இயக்கங்களின் போராட்டங்கள் மற்றும் அடைவுகளை **நாம் மதிக்கின்றோம்.**

பெண்ணியவாத பெண்கள் உரிமைக்கான நிறுவனங்கள், வலையமைப்புக்கள், மற்றும் இயக்கங்களுடன் நட்பு வட்டங்களாக செயலாற்றுவதற்கு **நாம் எம்மை அர்ப்பணிக்கின்றோம்.** அத்துடன், பெண்ணியவாத தலைமைத்துவதத்திற்கும், குரல்களுக்கும், மற்றும் தளங்களுக்கு மதிப்பளிக்கின்றோம். நாம் பெண்ணியவாத கோரிக்கைகளுக்கு மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம்.

சமமற்ற பால்நிலை அதிகாரத் தொடர்புகளில் தன்னிலைமாற்றம் செய்வதற்கு நாம் முயற்சிக்கின்றோம். பல்வேறுபட்ட பாலியல் அடையாளங்களைக் கொண்ட பெண்கள், ஆண்கள் மற்றும் நபர்களை மட்டுப்படுத்தப்பட்ட பால்நிலை மற்றும் பாலியல் சமூக நியமங்களின் தாக்கங்களிலிருந்து விடுபடச் செய்வதற்கு முயற்சிக்கின்றோம்.

*மேலதிக தகவல்களுக்கு : All About Feminism*

## 2. நாம் குறுக்கு நிலைமை (Intersectional) பெண்ணியவாதத்தைத் தழுவிக் கொள்கின்றோம்

ஓரினப்பாலீர்ப்பு மீதான அச்சம், நிலைமாற்றுப் பால்நிலை மீதான அச்சம், இனவாதம், வயதுசார் பாரபட்சம், ஆற்றல்சார் பாரபட்சம், வேற்றினக்காழ்ப்புணர்வு, வகுப்புவாதம், அல்லது நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட மற்றும்/அல்லது மத அடிப்படையிலான நம்பிக்கைகள் அல்லது பின்னணிகளை அடிப்படையாகக் கொண்ட ஏனைய அநீதிகளில் பால்நிலை சமத்துவமின்மைகள் வெளிக்காட்டப்படுகின்றன என்பதைப் **புரிந்து கொள்வதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.** ஒடுக்குமுறைகளால் மக்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்படுவதுடன், ஒருசிலர் ஒரே நேரத்தில் பல்வேறு வழிகளில் பாதிக்கப்படுவதையும் நாம் அடையாளங் கண்டுள்ளோம். இவ் ஒடுக்குமுறைகளின் கட்டங்கள் மற்றும் குறுக்கு நிலைமைப் பிரச்சினைகள் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள், பால்நிலை இணக்கமற்றவர்கள், பல்நிற இனத்தவர்கள், இயலாமையுடன் கூடிய நபர்கள், மற்றும் இனரீயான சிறுபான்மையினர் போன்றோரை சமமற்ற வகையில் பாதிக்கின்றது.

பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகள், பாகுபாடுகள் மற்றும் அநீதிகளால் சமமற்ற வகையில் ஓரங்கட்டப்பட்டவர்களுடைய வழிகாட்டல்களை **நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.**

குறுக்கு நிலைமை பெண்ணியவாத இலக்குகளுக்கு எவ்வாறு ஒத்துழைக்க முடியுமெனவும், சமூக நீதிக்கான பொறுப்பு மிகுந்த நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது எனவும்,

ஆராய்வதற்காக ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதற்காக **நாம் செயற்படுகின்றோம்.**

ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கிடையே காணப்படுகின்ற பல்வகைத்தன்மையை நாம் அடையாளங் காண்பதுடன், அவர்கள் அதிகாரம் மற்றும் சிறப்புரிமைகளை ஒரே விதமாக அனுபவிப்பதில்லை என்பதை **நாங்கள் அறிந்து கொண்டுள்ளோம்.**

3. நாங்கள் அனைவருக்கும் மனித உரிமைகளை உரித்தாக்குவதற்காக ஒத்துழைக்கின்றோம்.

நாம் மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனம் (UDHR), பெண்களுக்கெதிரான அனைத்துவித பாகுபாடு காட்டல்களுக்க எதிரான சமவாயம் (CEDAW), சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் (CRC) மற்றும் ஏனைய சர்வதேச மனித உரிமைச் சாதனங்களின் கோட்பாடுகளுக்கு **இணங்கி செயலாற்றுகின்றோம்.**

மனித உரிமைகளை அங்கீகரித்து, அவற்றை நிலைநிறுத்தி, மேம்படுத்திப் பாதுகாப்பதற்கு அரசு பொறுப்புக் கூறல் வேண்டுமென்பதை பரிந்துரைத்து வாதிடுவதற்காக **நாம் எம்மை அர்ப்பணிக்கின்றோம்.**

4. ஆண்களை முதன்மைப்படுத்திய முறைமையை இல்லாது செய்வதற்க நாம் செயற்படுகின்றோம்.

ஆண்களை முதன்மைப்படுத்திய முறை என்பது, அனைத்து சமூகங்களிலும் அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒடுக்குமுறை என்பதை **நாம் அடையாளங் கண்டுள்ளோம்.** ஆண்களை முதன்மைப்படுத்தும் முறையானது, பெண்ணியத்திற்கு மேலான ஆணாதிக்கத்தை போற்றுகின்ற, மற்றும் பெண்கள், பெண் பிள்ளைகள் மற்றும் பால்நிலை இணக்கமற்றவர்களை விடவும் ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு அதிகாரத்தைக் கூட்டாக வழங்குகின்ற முறைமையாக நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம்.

மக்களையும் பூமியையும் சுரண்டுகின்ற ஆண்களை முதன்மைப்படுத்திய நடத்தைக் கோலங்களை முடிவுறுத்துவதற்காக நாம் செயலாற்றுகின்றோம். அத்துடன், நாம் வள அகழ்வுகளுடன் தொடர்புடைய பொருளாதாரக் கட்டமைப்புக்களை எதிர்க்கின்றதுடன், தனிநபர்கள் மீதும், காணிகள் மற்றும் வாழ்வாதாரத்தின் மீதுள்ள கட்டுப்பாடுகளை முடிவுறுத்துவதற்கும் **நாம் செயலாற்றுகின்றோம்.** அவ்வாறானவர்களுக்கு

ஒத்துழைப்புக்களையும் சிறப்புரிமைகளையும் வழங்குகின்ற அரசியல் முறைமைகளை மாற்றியமைப்பதற்கும் நாம் முயற்சிக்கின்றோம்.

அனைத்து மனிதர்கள் மற்றும் புவிக்கிடையில் காணப்படுகின்ற ஒத்துழைப்பு மற்றும் தொடர்பு முறைகளிலுள்ள உலகளாவிய பிணைப்பு பற்றி **நாம் நம்பிக்கை கொள்கின்றோம்.** உலகில் காணப்படுகின்ற உயிர்ப்பல்வகைமைக்குள் அனைத்து மனிதர்கள், மற்றும் பூமியின் நிலைபேற்றுத்தன்மை, பாதுகாப்பு மற்றும் நல்விருத்தியின் அடிப்படையிலான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கின்ற கூட்டு இயக்கங்களின் ஒரு பகுதியாகவே நாம் எம்மைக் காண்கின்றோம்.

*மேலதிக தகவல்களுக்கு : Our Theory of Change*

5. பால்நிலை மற்றும் பாலியல்பு பன்முக அடையாளங்கள், வெளிப்பாடுகள், மற்றும் பண்புகளை அவற்றைப் போற்றுகின்றோம். ஏற்றுக்கொள்கின்றோம்.

அனைத்து பல்வகைமையிலும் ஒத்தபாலீர்ப்புடைய ஆண், ஒத்தபாலீர்ப்புடைய பெண், இருபாலீர்ப்புடையவர், திருநர், பால் பல்வகைமையினர், மற்றும் குயர் நபர்களின் மனித உரிமைகளுக்காக நாம் மிகவும் ஒத்துழைப்பு வழங்குகின்றோம்.

பாலியல்பு மற்றும் பால்நிலை அடையாளங்கள் சிக்கலானது, நெகிழ்வானது, பல்வகையானது மற்றும் மாற்றுமுறுவது என்பதை நாம் அடையாளங் கண்டுள்ளோம்.

பல்வகைமையான பாலியல் நாட்டங்கள், பால்நிலை அடையாளங்கள் மற்றும் வெளிப்பாடுகள், மற்றும் பாலியல் பண்புகளின் அடிப்படையில் சிஸ் பால்நிலை (பிறப்பின் போது நிர்ணயிக்கப்பட்ட அதே பால்நிலையுடன் அடையாளப்படுத்தல்) மற்றும் எதிர்ப்பாலீர்ப்பு அடையாளங்களுக்கு சிறப்புரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் தீங்கான சமூக நியமங்களில் தன்னிலை மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு **நாம் செயலாற்றுகின்றோம்.**

நாம் ஒத்தபாலீர்ப்பு மீதான அச்சத்திற்கும், எதிர்ப்பாலீர்ப்பு நியமங்களுக்கும் எதிராக குரல் கொடுப்பதற்கு ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் மற்றும் அனைத்து பால்நிலைகளையும் கொண்ட நபர்களுடன் **நாம் செயலாற்றுகின்றோம்.**

*மேலதிக தகவல்களுக்கு : SOGIESC Rights*

**6.** நாம் இனவாதத்திற்க எதிராகவும் அவற்றுக்கான மூலகாரணிகளை களைவதற்கும் முயற்சிக்கின்றோம்.

வெள்ளையின மேலாதிக்கம், காலணித்துவம் மற்றும் இனவாதம் வரலாறுகளிலும் முறைமைகளிலும் காணப்படுகின்றதெனவும், அவற்றின் ஒரு பகுதியெனவும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். நாம் உலகில் எந்தவொரு பகுதியிலும் காணப்படும் காலணித்துவம் தேசியவாதம், மற்றும் இனவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிர்த்து நிற்கின்றோம்.

உலகளாவிய ரீதியிலான கறுப்பினத்தவர் மற்றும் சுதேசிகளுக்கு எதிரான அனைத்துவித இனவாதங்களுக்கு எதிராக உடனடியாக சவால் விடுப்பதற்கான தேவையை **நாம் அறிந்துள்ளோம்.**

இன நீதிக்காக தொடர்ச்சியான கூட்டுப் பிரதிபலிப்புக்கள், கல்வி மற்றும் நடவடிக்கைகளுக்காக **நாம் தளங்களை உருவாக்குகின்றோம்**.

**7.** பால்நிலை, சமூக மற்றும் காலநிலை நீதிக்காக முனைப்புடன் ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளிடமுள்ள இயலுமைகள் பற்றி நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எங்களிடமுள்ள மனிதநேயம் பற்றி **நாம் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்.**

அனைத்து ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கும், அவர்களின் அனைத்துவித பல்வகைமையிலும், ஆண் ஆதிக்கத்தில் காணப்படும் கட்டுப்படுத்தல்கள், மற்றும் தீங்கான வியாக்கியானங்களை சுயசிந்தனையுடன் புரிந்து கொள்வதற்கும், நிராகரிப்பதற்கும் மற்றும் வெற்றிகொள்வதற்கும் இயலும் என்பதை **நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.** ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் ஒத்துணர்வு, பேணுகை மற்றும் அமைதிக்காக அவர்களுடைய இயலுமைகளை முழுமையாக விருத்தி செய்து கொள்ளக் கூடிய வகையில் ஆணை முதன்மைப்படுத்தி முறையின் தடைகளை வெற்றிகொள்வதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் தனிநபர் உரிமைகள், நீதி, சுகாதாரம், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் நல்விருத்தி மற்றும் அனைத்துவித பால்நிலையைக் கொண்டவர்களின் நல்விருத்திக்காகவும் செயலாற்ற வேண்டுமென்பதை **நம்பிக்கை கொள்கின்றோம்.**

ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளின் ஆண்களை முதன்மைப்படுத்தி முறையால் சிறப்புரிமைகள் கிடைக்கின்றதைப் போலவே பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் **நாம் புரிந்து கொண்டிருக்கின்றோம்.** ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் உள்ளிட்ட அனைவரையும் உள்ளடக்கிய ஒவ்வொருவருக்கும் உலகளாவிய பால்நிலை நீதியின் பிரதிகூலங்கள் கிடைக்கும் என்பதை நம்புகின்றோம்.

**8.** நாம் எமது முறைமைகள், பிரயோகங்கள், பெறுமதிகள் மற்றம் மனோநிலைகள் போன்றவற்றிலான காலணித்துவத்திலிருந்து விடுபடச் செய்வதற்கு முயற்சிக்கின்றோம்.

காலணித்துவம், ஐரோப்பிய மையக் கலாச்சாரம், மற்றும் வடதுருவ அதிகாரக் கட்டமைப்புக்களை உலகம் பூராகவும் எவ்வாறு சமத்துவமின்மையை உருவாக்குகின்றமை பற்றி **நாம் வினாத்தொடுத்து,** சவால் விடுத்து மற்றும் வெளிக்கொணர்கின்றோம். நாம் இவ்வாறான உயர்ந்தளவிலான உலக அதிகாரச் சமத்துவமின்மைகளை மாற்றியமைப்பதற்கும் மற்றும் ஆணை முதன்மைப்படுத்திய நியமங்களில் தன்னிலை மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவும் செயற்படுகின்றோம்.

ஒடுக்கப்பட்ட மற்றும் சுதேச கலாச்சாரங்கள் மற்றும் அவற்றின் கருத்துக்களுடன் கூடிய தலைமைத்துவத்திற்கும் மெய்யறிவுக்கும் **நாம் மதிப்பளிக்கின்றோம்.**

உலகம் பூராகவும் காலணித்துவம் எவ்வகையில் பால்நிலைச் சமத்துவமின்மைகள் மற்றும் வேறு விதமான ஒடுக்குமுறைகள் மற்றும் ஏனைய பாகுபாடுகள் மீது ஏற்படுத்துகின்ற ஆழமான தாக்கங்களை **அடையாளங் காண்கின்றோம்.**

தேசங்கள் மற்றும் சமூகங்களுக்கிடையில் அதிகாரத்தை சமமாகப் பகிர்ந்து செல்லும் வகையில் உள்ளடக்கக் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் **நாம் முயற்சிக்கின்றோம்.** காலணித்துவ மரபுவழியின் அடிப்படையிலான ஒடுக்குறைகள் மற்றும் பாகுபாடுகளின் கட்டமைப்புக்களில் எமது செயற்பாடுகள் - அதன் நிதியனுசரணை உள்ளிட்ட – நிலைநிறுத்தப்பட்டுள்ள விதம் மற்றும் எமது சொற்பிரயோகங்கள் மற்றும் செயற்பாடுகளில் தீங்கான இயங்குநிலைகள் மீள் உருவாக்கத்தில் காணப்படும் இடர்நேர்வுகள் பற்றி நாம் சுயவிமர்சனத்துடன் பரிசீலிக்கின்றோம்.

9. தன்னிலை மாற்றங்கள் எமக்குள்ளேயே ஆரம்பிக்கப்பட வேண்டுமென நாம் நம்புகின்றோம்

நாங்களும் இவ்வாறான ஒழுக்குமுறையான கட்டமைப்புக்கள், மற்றும் அதன் பகுதியாகவே வாழ்கின்றதுடன், அவற்றை தன்னிலைமாற்றம் செய்வது என்பது எமக்குள்ளே தன்னிலைமாற்றம் ஏற்படுவது என்பதை **நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.** தனிப்பட்ட தன்னிலைமாற்றம் என்பது (personal Transformation) சமூக மாற்றத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது.

ஆனாலும், மற்றவர்களுடைய மற்றும் சிக்கலான சமூகப் பிரச்சினைகளால் தோன்றுகின்ற முறைமைகள் தொடர்பாக தன்னிலைமாற்ற விழிப்புணர்வுகளுக்காக ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளிடையே தொடர்ச்சியாக பிரதிபலிக்கப்படும் அப்பியாசங்களை **நாம் ஊக்குவிக்கின்றோம்.**

ஆண்களை முதன்மைப்படுத்திய முறைமை, இனவாதம், காலணித்துவம் போன்றவற்றுடன் தொடர்புடைய ஒடுக்குமுறைக் கட்டமைப்புக்களால் இடம்பெறும் தீங்குகள் பற்றிய தெளிவுபெறுவதற்கு **நாம் முயற்சிக்கின்றோம்.** தனிப்பட்ட மற்றும் கூட்டான குணப்படுத்தல்கள், சுயமான மற்றும் கூட்டான பாதுகாப்புக்கான தளத்தை உருவாக்கி வழங்குகின்றோம்.

நாம் எமது வாழ்நாளில் - எமது உடல், எமது உணர்வுகள், எமது மனம், மற்றும் எமது பெறுமதிகளை - ஆண்களை முதன்மைப்படுத்திய முறைமையை ஒழிக்கும் பணியில் முழுமையாக **ஈடுபடுத்துகின்றோம்.**

*மேலதிக தகவல்களுக்கு : Inner Work for Social Change*

10. நாம் எமது சொற்பிரயோகங்கள், செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்களில் பொறுப்புக் கூறுகின்றோம்

விமர்சனங்கள் மற்றும் பின்னூட்டல்களை **நாம் வரவேற்கின்றோம்.** அதனை ஏற்றுக்கொள்வதற்கும், அவற்றிலிருந்து கற்றுக் கொள்வதற்கும், விருத்தியடைவதற்கும், மற்றும் பொறுப்புக் கூறும் வகையிலான பதிலளிப்புக்களைக் கூறுவதற்கும் எம்மை **நாம் அர்ப்பணிக்கின்றோம்.**

பெண்ணியவாத பெண்கள் உரிமைக்கான அமைப்புக்கள், LGBTIQ இனரின் உரிமைக்கான குழுக்கள் மற்றும் இன நீதி, இளைஞர், பொருளாதார மற்றும் காலநிலை நீதி, அமைதி, மற்றும் பல்வகைமையான இயக்கங்கள் மீது செவிமடுப்பதற்கும் மற்றும் பங்காளராக செயற்படுவதற்கும் **நாம் எம்மை அர்ப்பணிக்கின்றோம்.** நாங்கள் இயங்குகின்ற சூழமைவுக்கேற்ப இவ்வாறான பெண்ணியவாத பங்காளர்களுக்கு நாம் பொறுப்புக் கூறுகின்றோம்.

எமது வேலைகள், செயற்பாடுகள், மனப்பாங்குகள், நடத்தைகள் மற்றும் அப்பியாசங்கள் மூலம் பெறுபேறுகளை அடையும் சமூகங்களுக்கு, நிறுவனங்களுக்கு, பங்காளர்களுக்கு மற்றும் குழுக்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கு **நாம் முயற்சிக்கின்றோம்.** இதில் நாம் ஒருவருக்கொருவர் பொறுப்புக் கூறல் மற்றும் MenEngage Alliance இன் வலையமைப்புக்களின் தலைமைத்துவதமும் உள்ளடங்குகின்றது.

ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை மற்றும் அதிகாரத்தைப் பகிரந்து கொள்ளும் வகையிலான அணுகுமுறைகளை **நாம் பேணி விருத்தி செய்கின்றோம்.** பகிரப்பட்ட அதிகாரம், சமத்துவம் மற்றும் நீதியான உலகத்தை உருவாக்குவதற்கான கோட்பாடாக பொறுப்புக்கூறல் இருக்கின்றமையை நாம் உணர்கின்றோம்.

*மேலதிக தகவல்களுக்கு : MenEngage Accountability Standards*